# சட்டப்பேரவையில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதிலுரை...

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

முதலீட்டு மானியமாக ரூ.1,409 கோடியே 89 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) கழக அரசு பொறுப்பேற்ற 4 ஆண்டுகளில், ரூ.1,290 கோடியே 88 இலட்சம் முதலீட்டு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த மானியம் அ.தி.மு.க. ஆட்சியில் ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ.141 கோடி வழங்கப்பட்ட நிலையில், கழக ஆட்சியில் 2 மடங்கு அதிகமாக ரூ.290 கோடி அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) உண்மையைச் சொன்னால் மிகவும் வருத்தப்படுகிறார்களே!

வசதியாக்கல் மன்றங்கள். (குறுக்கீடு) கொள்முதல் செய்யும் நிறுவனங்கள் குறு, சிறு நிறுவனங்களுக்கு வழங்காத நிலுவைத் தொகையை,

## திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறியில் ரூ.3 கோடி திட்ட மதிப்பில் கோரைப்பாய் குழுமம் அமைக்கப்படும்.

சட்டப்பூர்வமாக பெற்றுத் தருவதற்காக சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை ஆகிய 4 மண்டலங்களில் வசதியாக்கல் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இதனுடைய தேவையினை உணர்ந்த நம்முடைய அரசு, கடந்த வருடம் வேலூர், தூத்துக்குடி ஆகிய 2 மண்டலங்களில் புதிய வசதியாக்கல் மன்றங்களை கடந்த ஆண்டில் தொடங்கியது. இந்த மன்றங்கள்மூலம் 4 ஆண்டுகளில் 2,434 குறு, சிறு நிறுவனங்களுக்கு ரூ.447 கோடியே 4 இலட்சம் கொள்முதல் நிறுவனங்களிடம் இருந்து பெற்று வழங்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிட்கோ தொழிற்பேட்டைகள். தமிழகத்தில் சமச்சீர் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்திட வேண்டுமென்பதற்காக, MSME தொழில் நிறுவனங்க ளுக்காக, முதல்வர் அவர்களால், கடந்த 4 ஆண்டுகளில் ரூ.365 கோடி மதிப்பீட்டில், 621 ஏக்கர் பரப்பளவில் 13 புதிய தொழிற்பேட்டைகள் தொடங்கப்பட்டன. இதில் 2,513 தொழில்மனைகள் தொழில் முனைவோர்க்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 239.54 ஏக்கர் பரப்பளவில் ரூ.209 கோடியே 39 இலட்சம் மதிப்பீட்டில், 6 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**புதிய சிட்கோ தொழில் பேட்டைகள்!**

இந்த நிதிநிலை அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம், விழுப்புரம் மாவட்டம், சாரம் மற்றும் நாயனூர், கரூர் மாவட்டம், நாகம்பள்ளி, திருச்சி மாவட்டம், சூரியூர், மதுரை மாவட்டம், கருத்தபுளியம்பட்டி, இராமநாதபுரம் மாவட்டம், தனிச்சியம், தஞ்சாவூர் மாவட்டம், நடுவூர், திருநெல்வேலி மாவட்டம், நரசிங்க நல்லூர் ஆகிய 9 இடங்களில் 398 ஏக்கர் பரப்பளவில் ரூ. 366 கோடி மதிப்பில் புதிய சிட்கோ தொழில் பேட்டைகள் அமைக்கப்பட உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னை மாவட்டம், பெரம்பூரில் ரூ.5 கோடி திட்ட மதிப்பில் வெள்ளி கலைப் பொருட்கள் குழுமம் அமைக்கப்படும்.

அவர்கள் கூட்டாக பயன்படுத்திக் கொள்ளும் வகையில், ஒன்றிய அரசின் குறு, சிறு தொழில் குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ், பொது வசதி மையங்கள் அமைக்கப்படுகிறது.

இந்தியா முழுவதும் 593 பொது வசதி மையங்கள் அமைப்பதில் 103 பொது வசதி மையங்கள் தமிழ்நாட்டில் அமைக்க அனுமதி பெற்று, இதில் 73 திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராமப்புறத் தொழில்முனைவோரின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் வகையில் கழக அரசு பொறுப்பேற்றவுடன் தமிழகம் முழுவதும் 45 குறுந்தொழில் குழுமங்கள் - Micro Cluster அறிவிக்கப் பட்டது. இதில் 11 குழுமங்கள் ரூ. 54 கோடியே 6 லட்சம் திட்ட மதிப்பீட்டில் ரூ. 44 கோடியே 15 லட்சம் மானியம் வழங்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இதர குழுமங்கள் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பெருங் குழுமங்கள். தமிழ்நாட்டின் MSME தொழில் நிறுவனங்களின் உற்பத்தி தரத்தினை உலக அளவில் உயர்த்திடும் வகையில் பெருங் குழுமத் திட்டம் - Mega Clusters கழக அரசால் கொண்டுவரப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கத்தில் ரூ.33 கோடியே 33 இலட்சம் அரசு மானியத்துடன் ரூ.47 கோடியே 62 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுவரும் துல்லிய உற்பத்தி பெருங்குழுமத்தில் ரூ.18 கோடியே 18 இலட்சம் மதிப்பீட்டில்நிறைவேற்றப்பட்ட முதல் கட்ட பணியினை கடந்த 22-11-2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரத்தால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் ரூ.71 கோடியே 56 இலட்சம் அரசு மானியத்துடன் ரூ. 155 கோடி திட்ட மதிப்பீட்டில், அமைக்கப்பட்டுவரும் மருந்தியல் பெருங்குழுமத்தின் முதல் கட்ட பணியாக 46 தொழில்மனைகள் தொழில்முனைவோருக்கு ஒதுக்கீடு செய்து முதற்கட்டப் பணி நடைபெற்று வருகிறது. முதல்வர் அவர்கள் விரைவில் இந்த திட்டத்தைத் தொடங்கி வைக்க இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பேரவை உறுப்பினர் தெரிவித்ததைப்போல, கோவை மாவட்டத்தில் தங்க நகை தொழில்முனைவோர்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, முதலமைச்சர் அவர்களால் கோயம்புத்தூர்-குறிச்சி தொழிற்பேட்டையில் ரூ.126 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டில் 9 தளங்களுடன்கூடிய அடுக்குமாடி தொழில் பூங்கா அமைக்க அறிவிக்கப்பட்டு, இந்த திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது. முதல்வர் அவர்களால் விரைவில் அடிக்கல் நாட்டப்படவுள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**தொழில் வளாகங்கள்!**

அதுமட்டுமின்றி உறுப்பினர் தெரிவித்ததுபோல, இன்றைக்கு ஒரு மாவட்டங்களிலிருந்து, மற்றொரு மாவட்டத்திற்கு தொழில் தொடங்குவதற்கு நிறையபேர் வருகிறார்கள். அப்படிப்பட்ட தொழிலாளர்கள் தங்குவதற்கு வசதிகள் கிடையாது. வெளியில் சென்று தங்கினால் அதிகமான வாடகை தர வேண்டியிருக்கிறது. இந்த நிலையை உணர்ந்த நம்முடைய முதல்வர் அவர்கள் நகரங்களில் போதிய இட வசதி இல்லாததாலும், நில மதிப்பு அதிகமாக உள்ளதாலும், MSME நிறுவனங்கள் உடனடியாகத் தொழில் தொடங்க முடியாத நிலை இருக்கிறது. இதற்குத் தீர்வு காணும் வகையில் தொடங்கப்பட்ட அடுக்குமாடி தொழில் வளாகத் திட்டத்தின்கீழ் கிண்டி மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டைகளிலும், சேலம் மாவட்டம், அரியகவுண்டம்பட்டியிலும், ரூ.183 கோடியே 91 இலட்சம் மதிப்பீட்டில் 366 தொழில் கூடங்கள் கொண்ட 3 அடுக்குமாடி தொழில் வளாகங்கள் கட்டி திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் 4 இடங்களில், ரூ.184 கோடியே 71 இலட்சம் மதிப்பீட்டில் அடுக்குமாடி தொழில் கூடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதைப்போலவே, குறைந்த வாடகையில் தங்கிப் பணிபுரிய ரூ.61 கோடியே 85 இலட்சம் மதிப்பில் 1,698 தொழிலாளர்கள் தங்குகின்ற வகையில் கோயம்புத்தூர்-குறிச்சி தொழிலாளர்கள் தங்கும் விடுதியை முதல்வர் அவர்களும், சென்னை-அம்பத்தூர் தொழிலாளர்கள் தங்கும் விடுதியை துணை முதல்வர் அவர்களும் திறந்து வைத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, TAN-COIR. நம் ஆட்சி வந்ததற்குப்பிறகுதான் TAN-COIR நாம் உருவாக்கியிருக்கிறோம். இன்றைக்கு, தமிழ்நாட்டில் 6 இடங்களில் ரூ.37 கோடியே 81 இலட்சம் மானியத்துடன் ரூ.51 கோடியே 8 இலட்சம் மதிப்பில், கயிறு குழுமங்கள் அறிவிக்கப் பட்டுள்ளது.

இதில் பேராவூரணி, பொள்ளாச்சி, K-பரமத்தி, குண்டடம் ஆகிய 4 கயிறு குழுமங்கள் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. தென்னை நார் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக ரூ. 1 கோடியே 50 இலட்சம் மதிப்பில் பொள்ளாச்சியில் அமைக்கப்பட்டு வரும் ஏற்றுமதி மையம் விரைவிலே தொடங்கி வைக்கப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

EDII-தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்கப் பயிற்சி நிறுவனத்தின் மூலம், பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலுகின்ற 31 இலட்சத்து 11 ஆயிரம் மாணவ, மாணவியர்களுக்கு தொழில் முனைவு மற்றும் புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் இளைஞர்களின்புதியகண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்திட, கடந்த 4 ஆண்டுகளில் புத்தாக்க பற்றுச் சீட்டின்கீழ் 415 புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு ரூ.10 கோடியே 69 இலட்சம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புரத் தொழிலாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பை வழங்கி, அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்திட தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் Indcoserve, Sagoserve ஆகியவை செயல்பட்டு வருகின்றன. தொழில் வணிகத் துறையின்கீழ் செயல்படும் 262 சங்கங்களில் 68 ஆயிரத்து 761 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த தொழிற்கூட்டுறவு சங்கங்கள், கடந்த நிதியாண்டில், ரூ.1,755 கோடியே 39 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்து,

ரூ.106 கோடியே 95 இலட்சம் இலாபம் ஈட்டியிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பு பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள இருளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இத்துறையின்கீழ் 2 பாம்பு பிடிப்போர் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகிறது. சங்க உறுப்பினர்கள் பிடிக்கும் பாம்புகளிலிருந்து விஷ முறிவு மருந்து தயாரிக்க விஷம் எடுக்கப்படுகிறது. செங்கல்பட்டு இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற்கூட்டுறவுச் சங்கம் கடந்த ஆண்டு 599 கிராம் நஞ்சினை ரூ.2 கோடியே 77 இலட்சத்திற்கு விற்று, ரூ.86 இலட்சம் இலாபம் ஈட்டியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இண்ட்கோசர்வ் (INDCOSERVE). சிறு தேயிலை விவசாயிகள் வழங்கும் தேயிலைக்கு நல்ல விலை கிடைத்திட தொடங்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் கூட்டமைப்புதான் இண்ட்கோசர்வ் நிறுவனம். கடந்த ஆண்டு மட்டும், 11,178 மெட்ரிக் டன் தேயிலை உற்பத்தி செய்து, 24,000 தேயிலை விவசாயிகளுக்கு 77 கோடியே 87 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. சிறு தேயிலை விவசாயிகள் பயனடையும் வகையில் NABARD வங்கி நிதியுடன் 15 தேயிலை தொழிற்சாலைகள் 67 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, சேகோசர்வ் (Sagoserve). மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படுகிற ஜவ்வரிசி, மற்றும் ஸ்டார்ச் உள்ளிட்ட பொருட்களை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக விற்பனை செய்திட தொடங்கப்பட்ட சேகோசர்வ் கூட்டுறவு சங்கம், கடந்த 2024-2025 ஆம் நிதியாண்டில் 522 கோடியே 83 இலட்சம் ரூபாய் அளவிற்கு விற்பனை செய்து 3 கோடியே 29 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறது. ஜவ்வரிசியின் தனித்துவத்தை உறுதிப்படுத்த 'சேலம் சேகோ' என்ற புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது. வேதிப்பொருட்கள் கலப்படமில்லாத ஜவ்வரிசிக்கு புதிய வர்த்தக முத்திரை 20-12-2024 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தாய்கோ (TAICO) வங்கி. MSME நிறுவனங்களுக்கு கடனுதவி வழங்குவதற்கு தாய்கோ வங்கி. கடந்த ஆண்டு 1,056 கோடியே 18 இலட்சம் ரூபாய் வைப்பு நிதி திரட்டி, 12 கோடியே 77 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் MSME தொழில் நிறுவனங்கள் முதல்வர் அவர்களின் அயராத உழைப்பாலும், சீரிய திட்டங்களாலும், இந்திய அளவில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. MSME தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்யும் Udyam பதிவில் 50 இலட்சம் என்ற மைல்கல்லைக் கடந்து, 50,47,258 நிறுவனங்களைப் பதிவு செய்து சாதனை படைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம் 2030-ல் ஒரு டிரில்லியன் டாலர் (One Trillion Dollar) பொருளாதாரத்தை நாம் எட்டிட வேண்டும் என்பதாகும். நம்முடைய MSME துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, அதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 43 அறிவிப்புகள் இருக்கின்றன. படித்துவிடலாமா? (குறுக்கீடு) அது வரைக்கும் வராதே?

முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 43 அறிவிப்புகளை நான் வெளியிடுகிறேன்.

**அறிவிப்புகள்!**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

1. குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் 10 விழுக்காடு கூடுதல் முதலீட்டு மானியத்தின் உச்சவரம்பு ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்படும்

2. இயற்கையாக அமையப் பெற்றிருக்கும் தொழில் குழுமங்களின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் அக்குழுமங்களுக்கான உட்கட்ட

## ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சீனாபுரத்தில் ரூ.7.77 கோடி திட்ட மதிப்பில் நெசவு குழுமம் அமைக்கப்படும்.

மைப்பு, பொது வசதிகள் மற்றும் இதர முன்னெடுப்புகளுக்கு ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்

3. பழங்குடியினர் நிறைந்த பகுதிகளில் கடன் உத்தரவாதத்துடன் (Credit Guarantee) ரூ.100 கோடி அளவில் பழங்குடியினருக்கு, தொழில் தொடங்க கடனுதவிகள் வழங்க சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்

4. கிராம அளவிலான கைவினை குழுக்கள் மற்றும் குறுந்தொழில் குழுமங்கள் மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்திப் பொருட்களை பாதுகாத்திடும்பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.18.18 கோடி மதிப்பில் ஏற்படுத்தித் தரப்படும்

5. தேசிய சிறு தொழில் நிறுவனத்தின் ஒரு முனை பதிவு மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான சந்தை ஆகிய திட்டங்களில் பதிவு செய்வதை ஊக்குவிக்கும்பொருட்டு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்

6. உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs)மூலம் ஐந்து தனித்துவமான தயாரிப்புகளுக்கு பொதுவான வணிகக் குறியீடுகள் (branding) ரூ.3.62 கோடியில் உருவாக்கப்படும்

7. 60 வயதிற்கு உட்பட்ட இருளர் பாம்பு பிடிப்போர் தொழிற்கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு, விபத்து மற்றும் பாம்புக் கடியினால் ஏற்படும் உயிரிழப்பிற்கு இழப்பீடாக ரூ.20 இலட்சம் வழங்க ஏதுவாக ரூ.1.50 கோடி மதிப்பில் மூலதன நிதியம் உருவாக்கப்படும்

8. இண்ட்கோ தேயிலை தொழிற்சாலைகளின் தேயிலை சாகுபடிக்கு தேவைப்படும் விவசாய இயந்திரங்கள் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, இண்ட்கோ தேயிலை தொழிற்சாலைகளின் உறுப்பினர்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்படும்

9. தென்னை நார் சார்ந்த மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்ய முன்வரும் தொழில் ஆர்வலர்களுக்கு ஆதரவளிக்கும் விதமாக தொழில்நுட்பப் பரிமாற்றம், பயிற்சி, மானியங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து ரூ.5 கோடி மதிப்பில் ஒரு திட்டம் உருவாக்கப்படும்

10. தென்னை நார் உற்பத்தியில், மதிப்பு கூட்டலை ஊக்குவிக்கும் விதத்தில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு மேம்பாட்டு மையம் ரூ.9.86 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

> **வேளாண் பொருட்கள் உற்பத்தி சார்ந்த தொழில் முனைவோர்களுக்கு உதவிடும் வகையில் ஈரோடு சிட்கோ தொழிற்பேட்டை பகுதிIIல், சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் ரூ.15.23 கோடி திட்ட மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படும்.**

11. தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் தென்னை நார் சார்ந்த பொருட்களுக்கு சந்தை அங்கீகாரம் பெற தனித்துவமான கயிறு குறியீடு (branding) உருவாக்கப்படும்.

12. தென்னை நார் பொருட்களுக்கென சிறப்பு வாங்குபவர் விற்பவர் சந்திப்புகள் தமிழ்நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம்மூலம் ரூ.40 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

13. சேகோசர்வ் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு எண்முறை மாவுச்சத்து அளவீட்டுக் கருவிகள் (Digital Starch Meters) கொள்முதல் செய்ய 25 விழுக்காடு மானியம் வழங்கப்படும்.

14. தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பணிபுரியும்

20 பணியாளர்களுக்கு பிற மாநில தேயிலை தொழிற்சாலைகளில் திறன் மேம்பாட்டு பயிற்சி ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்படும்.

15. தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு பசுந்தேயிலை வழங்கும் உறுப்பினர்கள் கூடுதலாக பசுந்தேயிலை வழங்குவதை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் ரூ.4 இலட்சம் மதிப்பில் செயல்படுத்தப்படும்.

16. நடப்பாண்டில் ஆறு விற்பனையாளர் மேம்பாட்டு நிகழ்வுகள்

ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நடத்தப்படும். அவற்றுள் ஆதிதிராவிட/ பழங்குடியின தொழில் முனைவோருக்கான இரண்டு தனிச்சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்படும்.

17. ஏற்றுமதி நிறுவனங்களுக்கு, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத சிப்பமிடும் (packaging) முறைகள் குறித்து, ரூ.30 இலட்சம் மதிப்பில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படும்.

18. மின்னணு வர்த்தக தளங்களில், கைவினை கலைஞர்கள் உள்ளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை, பதிவேற்றம் செய்து அவர்களது உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்துவதற்கு வசதி செய்து தரப்படும்.

19. டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த 120 இளைஞர்களுக்கு ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் உணவு பதப்படுத்தும் தொழில் தொடங்க தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

20. உணவுத் தொழில்நுட்பம் மற்றும் வேளாண் துறை சார்ந்த

25 வேளாண் மற்றும் உணவுத் தொழில் நுட்ப பட்டதாரிகளுக்கு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

21. கவரிங் நகை தொழிலில் புகழ் பெற்ற சிதம்பரம் பகுதியில், லால்புரம் கிராமத்தில் கவரிங் நகை உற்பத்தியாளர்களுக்காக 5 ஏக்கர் பரப்பளவில் ரூ.1.24 கோடி திட்ட மதிப்பில் தமிழ்நாடு சிட்கோமூலம் சிறப்பு புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

22. வேளாண் பொருட்கள் உற்பத்தி சார்ந்த தொழில் முனைவோர்களுக்கு உதவிடும் வகையில் ஈரோடு சிட்கோ தொழிற்பேட்டை பகுதி-II-ல், சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் ரூ.15.23 கோடி திட்ட மதிப்பில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படும்.

23. அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், பரணத்தில்

ரூ.2.84 கோடி திட்ட மதிப்பில் நவீன முந்திரி பதப்படுத்தும் குழுமம் அமைக்கப்படும்.

24. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், முசிறியில்

ரூ.3 கோடி திட்ட மதிப்பில் கோரைப்பாய் குழுமம் அமைக்கப்படும்.

25. ஈரோடு மாவட்டம், பெருந்துறைவட்டம், சீனாபுரத்தில் ரூ.7.77 கோடி திட்ட மதிப்பில் நெசவு குழுமம் அமைக்கப்படும்.

26. மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் ரூ.7.97 கோடி திட்ட மதிப்பில் மகளிர் தொழில் முனைவோர்களுக்கான சிறு தானிய குழுமம் நிறுவப்படும்.

27. சென்னை மாவட்டம், பெரம்பூரில் ரூ.5 கோடி திட்ட மதிப்பில் வெள்ளி கலைப் பொருட்கள் குழுமம் அமைக்கப்படும்.

28. திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் வட்டம், கல்லிப்பாளையம் கிராமத்தில் ஆஃப்செட் பிரிண்டிங் மற்றும் புக் பைண்டிங் குழுமத்திற்கான பொது வசதி மையம் ரூ.31.75 கோடி திட்ட மதிப்பில் நிறுவப்படும்.

29. திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், பெருமாபாளையம் கிராமத்தில் அச்சு குழுமத்திற்கான பொது வசதி மையம் ரூ.29.93 கோடி திட்ட மதிப்பில் நிறுவப்படும்.

30. கரூர் மாவட்டம், மணிமங்கலம் வட்டம், ஆத்தூர் கிராமத்தில் செயற்கையிழை ஆடைகள் (Synthetic Textile Clothing) குழுமத்திற்கான பொது வசதி மையம் ரூ.31.75 கோடி திட்ட மதிப்பில் நிறுவப்படும்.

31. தொழில் நிறுவனத்தினர் மற்றும் தகவல் தொழில் நுட்ப தொழில்முனைவோர்களின் தற்போதைய பணியிட வசதி தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் இணை பணியிட வசதி வளாகம் (Co-Working Space Building) ரூ.23.33 கோடி திட்ட மதிப்பில் 4 இடங்களில் நிறுவப்படும்.

32. தொழில் முனைவோர்களின் தேவையினை கருத்தில் கொண்டு, 18 சிட்கோ தொழிற்பேட்டைகளில் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளான சாலை, மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு போன்றவை ரூ.40 கோடி திட்ட மதிப்பில் நடப்பாண்டில் மேம்படுத்தப்படும்.

33. காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் ரூ.37.25 கோடி திட்ட மதிப்பீட்டில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி நிறுவப்படும்.

34. ரூ.1.50 கோடி செலவில் குழந்தைகளுக்கான பொம்மை பொருட்கள் மற்றும் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கான கல்வி உபகரணப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான உட்கட்டமைப்பு சென்னை, கிண்டியிலுள்ள டான்சி கல்வி உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்கூடத்தில் உருவாக்கப்படும்.

35. மாநிலத்தில் 2-ஆம் மற்றும் 3-ஆம் நிலை நகரங்களில் 9000 பயனாளிகளுக்கு திறனுடன் கூடிய தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி திட்டம் ரூ.2.7 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

36. புத்தாக்க பற்றுச் சீட்டு (IVP) திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வரும் உதவித்தொகை பற்றுச்சீட்டு "அ"-விற்கு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாகவும், பற்றுச்சீட்டு "ஆ"-விற்கு ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.7 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

37. இளைஞர்களிடையே புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவிற்கான சிந்தனையை ஊக்குவிக்க, தமிழ்நாடு இளைஞர் புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டமானது (TNYIEDP), 2000 உயர்கல்வி நிறுவனங்களில் ரூ.19 கோடி மதிப்பீட்டில் "நிமிர்ந்து நில்" என்கிற பெயரில் செயல்படுத்தப்படும்

38. தமிழ்நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 கிராமங்களில், அனைவரையும் உள்ளடக்கிய தொழில்முனைவு வளர்ச்சி, ஊரக பகுதிகளில் புத்தாக்கம், நிலையான பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றினை மையமாகக் கொண்டு 100 புத்தொழில் நிறுவனங்களை உருவாக்கும் "கிராமம் தோறும் புத்தொழில்" திட்டம் ரூ.2 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

39. பெருநிறுவனங்களில் பணியாற்றும் நபர்களில் புத்தொழில் முனைவு ஆர்வமும் மற்றும் உரிய அனுபவமும் கொண்ட திறன் வாய்ந்த பணியாளர்களை தேர்ந்தெடுத்து அவர்கள் தொழில் தொடங்குவதற்கு தேவையான ஆதரவினை வழங்கும் Next Leap-தொழில் விரைவாக்கப் பயிற்சி திட்டம் ரூ.1 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும்.

40. மாநிலத்தின் உயர் கல்வி நிறுவனங்களில் நடைபெறும் மாணாக்கர் மற்றும் பேராசியர்களுக்கான புத்தொழில் செயல்பாடுகளை மதிப்பிட்டு தரவரிசைப்படுத்தும் திட்டம் தொடங்கப்படும்.

41. தமிழ்நாட்டில் புத்தாக்க தொழில்முனைவினை ஊக்கபடுத்த 'வென்ச்சர் பில்டர் (Venture Builder)' திட்டம்" ரூ.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

42. கல்வி நிலையங்கள், தொழில்துறை மற்றும் தொழில் முனைவோர்களை இணைக்கும் விதமாக ரூ.50 இலட்சம் செலவில் தமிழ்நாடு தொழில்நுட்ப பரிமாற்ற மையம் அமைக்கப்படும்.

43. விண்வெளித் தொழில்நுட்பம், கடல்சார் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு தகுந்த ஆதரவு வழங்கும் விதமாக தூத்துக்குடியில் புதிய வட்டார புத்தொழில் மையம் அமைக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பதிலுரை வழங்கினார்.